*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி - சென்னை - 4*
*01 09 2025 6 45*
*திங்கட்கிழமை காலை*

***தலைப்புச் செய்திகள்***

- *சீனா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினை சந்தித்துப் பேசவுள்ளார்.*
- *குடிமைப்பணியில் சேரும் இளம் அதிகாரிகள், இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான சிற்பிகளாக பணியாற்றுவார்கள் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*
- *பிரதமரின் வேண்டுகோளுக்கு ஏற்ப எதிர்வரும் பண்டிகை காலத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்குமாறு பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*
- *கத்தார் நாட்டில் உயிரிழந்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த நவாஸ் குடும்பத்தினருக்கு 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.*
- *ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

***<<<<>>>>***

*சீனா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினை சந்தித்துப் பேசவுள்ளார்.*

*Tianjin நகரில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர், இந்த அமைப்பின் மூலம் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் அணுகுமுறை குறித்த செயல்திட்டத்தை வெளியிட இருப்பதாக கூறினார்.*

*அதனைத் தொடர்ந்து ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு தாயகம் திரும்ப இருப்பதாகவும் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.*

முன்னதாக ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க வந்த நாடுகளின் தலைவர்களுக்கு சீன அதிபர் திரு. *Xi JinPing* அளித்த விருந்து நிகழ்ச்சியிலும் பிரதமர் கலந்துகொண்டார்.

கஜகஸ்தான், தஜிகிஸ்தான், பெலாரஸ், எகிப்து, மாலத்தீவு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் திரு. நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், நடப்பு காலாண்டில் 7 புள்ளி 8 சதவீத அளவிற்கு வளர்ச்சி அடைந்திருப்பது, பிரதமர் திரு.நரேந்திர மோடியின் நிர்வாகத் திறனை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள பகவான் பிர்சா முன்டா பவனில், பிர்சா முன்டாவின் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திர மோடியைத் தவிர வேறு யாராலும் இந்தியப் பொருளாதாரத்தை சிறப்பாக நிர்வகிக்க முடியாது என்று, உலகின் முன்னணி பொருளாதார நிபுனர்கள் கூறி இருப்பதை சுட்டிக்காட்டினார்.

நாட்டை சுயசார்புடையதாக மாற்ற, உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தை ஊக்குவித்து, சுதேசி கொள்கையை பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் திரு.கிரண் ரிஜிஜு வலியுறுத்தினார்.

<<<<>>>>

குடிமைப்பணியில் சேரும் இளம் அதிகாரிகள், 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான சிற்பிகளாக பணியாற்றுவார்கள் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

முசோரியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி நிர்வாக பயிற்சி மையத்தில் 2025ஆம் ஆண்டு தொகுப்பைச் சேர்ந்த குடிமைப் பணி பயிற்சி அதிகாரிகளிடையே பேசிய அவர், நாட்டின் அரசியல் சாசனத்தை பாதுகாப்பதோடு மக்கள் நலன் சார்ந்த பணிகளிலும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

*இந்தப் பயிற்சி இளம் அதிகாரிகள் பொது சேவையில் ஈடுபடுவதற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த வளாகத்தில் 50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தையும் திரு. ஜிதேந்திர சிங் திறந்து வைத்தார்.*

**<<<<>>>>**

*கத்தார் நாட்டில் சாலை விபத்தில் உயிரிழந்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கார் ஓட்டுநர் நவாசின் மறைவுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நவாசின் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பில் 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

*பிரதமர் திரு. நரேந்திர மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்ப எதிர்வரும் பண்டிகை காலத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களையும், ஆடைகளையும் வாங்குமாறு பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஓணம், நவராத்திரி, தீபாவளி மற்றும் கார்த்திகை தீபத் திருவிழா காலங்களில் உள்ளூர் பொருட்களை வாங்குவதன் மூலம் உள்நாட்டு வியாபாரிகளுக்கு நம்மால் இயன்ற ஆதரவை வழங்குவதன் மூலம் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*உலக அளவில் பொருளாதார சூழல் மாறிவரும் வேளையில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமையும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

**<<<<>>>>**

*காரைக்கால் அருகே படகு கவிழ்ந்ததால் நடுக்கடலில் தத்தளித்த மீனவரை இந்திய கடலோர காவல் படையினர் மீட்டு கரைசேர்த்தனர்.*

*நேற்று இப்பகுதியில் ICGS ராணி துர்காவதி கப்பலில் ரோந்து சென்ற கடலோர காவல்படை அதிகாரிகள், நடுக்கடலில் மீனவர் ஒருவர் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதை கண்டறிந்து அவரை மீட்டனர்.*

*பின்னர் காரைக்கால் துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்ட மீனவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை உள்ளூர் காவல்துறையினரிடம் ஒப்படைத்ததாக கடலோர காவல்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

*பண்டிகை கால நெரிசலை சமாளிக்கும் வகையில் சென்னை சென்ட்ரல் மற்றும் மதுரையில் இருந்து பரூனிக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

*இதன்படி மதுரை-பரூனி இடையேயான சிறப்பு ரயில் வரும் 10ஆம் தேதி முதல் நவம்பர் 26ஆம் தேதி வரை மதுரையில் இருந்து புதன்கிழமைதோறும் இரவு மணி 8.40க்கு புறப்பட்டுச் செல்லும்.*

*இதேபோன்று சென்னை சென்ட்ரில் இருந்து வரும் 14ஆம் தேதி முதல் நவம்பர் 30ஆம் தேதி வரை இந்த ரயில் இயக்கப்படும்.*

*திருநெல்வேலியில் இருந்து ஷமோகாவிற்கும் மற்றொரு சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.*

*இதற்கான முன்பதிவு நாளை தொடங்குகிறது.*

**<<<<>>>>**

*கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனைடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

**<<<<>>>>**

*விளையாட்டுத்துறைக்கென மத்திய அரசு உருவாக்கி வரும் சிறப்பான கட்டமைப்பு வசதிகள் காரணமாக மாணவ-மாணவியர் இடையே விளையாட்டு மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறது.*

*சேலத்தில் துப்பாக்கி சுடும் போட்டியில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக மாவட்ட துப்பாக்கி சுடும் விளையாட்டு சங்க செயலாளர் தெரிவிக்கிறார்.*

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*கா□ா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் செய்தித்தொடர்பாளர் அபு உபைதா கொல்லப்பட்டார்.*

**<<<<>>>>**

*இந்தோனேஷியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்திர அலவன்ஸ் தொகை வழங்க கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அந்தத் தொகையை திருப்பி வழங்க அரசியல் கட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளன.*

**<<<<>>>>**

*உலக நாடுகளின் மத்திய வங்கிகள் அமெரிக்க அரசின் பங்கு பத்திர மதிப்பைவிட அதிக அளவு தங்கத்தை கையிருப்பில் வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

மிசோரம் மாநிலத்தில் சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறும் வகையில் நான்கு மாதகால சிறப்பு பிரச்சார இயக்கம் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்திற்கு உட்பட் நர்சபுரம் பகுதியில் விநாயகர் சிலை ஊர்வலத்தின்போது ஏற்பட்ட வாகன விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நாளை புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருமயம், விராலிமலை உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருச்சி மாவட்டம் சிறுகனூர் அருகே சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு இன்று முதல் ஒரே இடத்தில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும் என்று வனத்துறை அறிவித்துள்ளது.

<<<<>>>>

திருப்பதி - ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயிலில் செல்ஃபோன் திருடிய ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த நபர் மயிலாடுதுறை ரயில்வே காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

<<<<>>>>

*தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்திருப்பதை அடுத்து சுற்றுலாப் பயணிகள் அருவியில் குளிக்கவும், பரிசல் பயணம் மேற்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.*

**<<<<>>>>**

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.*

*இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு நடைபெறும்.*

**<<<<>>>>**

*16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி மங்கோலியாவின் உலான்பாட்டர் நகரில் காலை 9 மணிக்கு நடைபெறும்.*

**<<<<>>>>**